# ரோஜாக் வியாபாரி கடை நடத்த முடியாது

கேலாங் சிராயின் முன்னாள் தற்காலிக ஈரச் சந்தையில் ரோஜாக் உணவுக் கடை வைத்திருந்த ஷேக் அலாவுதின் மொஹிதீன் உணவைச் சாப்பிட்டவர்களில் உணவு நச்சு பாதிப்பால் இருவர் மரணமடைந்ததுடன், 154 பேர் நோயுற்றனர்.

இதற்காக அவருக்கு செவ்வாய்க்கிழமையன்று கீழ் நீதிமன்றம் $9,000 அபராதம் விதித்தது.

இதைத் தொடர்ந்து தற்பொழுது தேசிய சுற்றுச்சூழல் வாரியம் அவருக்கு நிர்வாக ரீதியிலான தண்டனை வழங்கியிருக்கிறது. அதன்படி, அலாவுதின் இனி உணவு அங்காடிக் கடைக்கு மனுச் செய்ய முடியாது.

அத்துடன் உணவுக் கடை தொடர்பிலாகவோ உணவுப் பொருட்களைக் கையாள்வது தொடர்பிலான உரிமத்துக்கு மனுச் செய்ய இயலாது என சுற்றுச்சூழல் வாரியம் நேற்று வெளியிட்ட தனது அறிக்கையில் கூறியது.